**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 600 006**

**பத்திரிக்கைச் செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2020–21ஆம் கல்வி ஆண்டிற்கான முதுகலை ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை – 1 ஆகிய காலிப்பணியிடங்களுக்கு போட்டித்தேர்வு மூலம் நேரடி நியமனம் செய்வதற்கு அறிவிக்கை எண்.01/2021 நாள் 09.09.2021 முதல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் இணைய வழி வாயிலாக 18.09.2021 முதல் பெறப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அரசாணை எண். 82, நாள் 16.08.2021ன்படி தமிழ் வழி பயின்றோருக்கான சான்றிதழ் (PSTM) சார்ந்து மென்பொருளில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாலும் மேலும் பல்வேறு விண்ணப்பதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் முதுகலை ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை – 1 ஆகிய பணியிடங்களுக்கு இணையவழி வாயிலாக விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி தேதி 17.10.2021லிருந்து 31.10.2021 மாலை 5.00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது என அறிவிக்கப்படுகிறது.

**தலைவர்**

**நாள் : 11.10.2021**